**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திருமதி. M.S. வரலட்சுமி, பி.ஏ., பி.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.502/2024**

**(CNR.NO.TNVP02-000410-2024)**

தனலட்சுமி .... வாதி

/எதிர்/

வீராசாமி .... பிரதிவாதி

இவ்வழக்கு 14.03.2023 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 14.03.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் ஏ.நெ.593/2017 நாள் 24.07.2023 தேதியிட்ட உத்தரவு படி திருக்கோவிலூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.267/2023 ஆக 31.08.2023 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் மாண்பமை விழுப்புரம் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் ஏ.நெ.327/2020 நாள் 23.11.2023 தேதியிட்ட உத்தரவு படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு அ.வ.எண்.502/2024 ஆக 03.06.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின் 10.03.2026 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் நீதிமன்றத்தில்

அழைத்தும் ஆஜராகாததால் அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்பு**

தாவா தொகை ரூ.2,79,455/-மும் அசல் தொகை ரூ.2,20,000/-க்கு பின் வட்டியும், கோர்ட்டு செலவும், வாதிக்கு பிரதிவாதியாலும் பிரதிவாதிக்கு பாத்தியமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களாலும் கிடைக்க தீர்ப்பு செய்ய வேண்டியும் இந்த தாவாவின் செலவுத் தொகை வாதிக்கு பிரதிவாதியால் கிடைக்கவேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2. வழக்குரை சுருக்கம்:-**

2020ம் வருடம் மார்ச் மாதம் 27ம் தேதியில் வாதியிடம் பிரதிவாதி வியாபார செலவிற்கும் இதர குடும்ப செலவுக்காக ரூ.2,20,000/- ரொக்கமாக தொகை பெற்றுக்கொண்டு அந்த தொகைக்கு மாதம் 1க்கு ரூ.100/-க்கு வட்டி ரூ.1/- ஆக சேர்த்து கூடிய அசல் வட்டி தொகையை வாதி வேண்டும்போதோ, வாதி உத்தரவு பெற்றவருக்கோ கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் தாவா பிராமிசரி நோட்டை வாதி பேருக்கு பிரதிவாதி விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், சு.அந்திலி கிராமத்தில் எழுதி கொடுத்திருந்தார் என்றும் தாவா பிராமிசசரி நோட்டிற்குரிய தொகையைக் கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியை பலமுறை நேரிலும் ஆட்கள் மூலமாகவும் அதன் பின்பு 27.02.2023ல் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு மூலம் கேட்டும், மேற்படி அறிவிப்பு விவரம் தெரிந்து வேண்டுமென்றே வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய பிரதிவாதி,

வாதிக்கு சேரவேண்டிய அசல் மற்றும் வட்டித் தொகையை ஏதும் கொடுத்து பைசல் செய்யாததால் வாதி இந்த தாவாவை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி Madras Act IV of 1938-ன் படி விவசாயி என்றும் அதனால் தாவா பிராமிசரி நோட்டிற்கு 0.75 NP வீதம் வட்டி Claim செய்கிறார் என்றும் கூறி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணை சார்வாகி அவர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகிவிட்டு பின் பதிலுரைக்கு போடப்பட்டிருந்த நிலையில் 05.02.2026 அன்று பதிலுரை தாக்கல் செய்யாததால் அவர் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துள்ளார். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா பிராமிசரி நோட்டில் சாட்சி கையொப்பமிட்ட சாட்சிகளான திரு.ராதாகிருஷ்ணன் என்பவர் வா.சா.2 ஆகவும் திரு.செல்வராஜ் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பின் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சனை :-

இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா அல்லது இல்லையா?__என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

6. தீர்வு :-

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் பிரதிவாதி வாதியிடம் கடந்த 27.03.2020 அன்று ரூ.2,20,000/- ரொக்கத்தை கடனாக பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ.1/- வீதம் ஆக சேர்த்துக் கூடிய அசல் வட்டி தொகையை வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதி அதிகாரம் பெற்றவரிடமாவது ரொக்கமாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு வாதி பேருக்கு பிரதிவாதி பிராமிசரி நோட்டை ரூ.2,20,000/-க்கு விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், சு.அந்திலி கிராமத்தில் எழுதிக் கொடுத்தார் என்றும், தாவா பிராமிசரி நோட்டை பிரதிவாதி எழுதிக் கொடுத்த பிறகு தாவா பிராம்சரி நோட்டுப்படி சேர வேண்டிய அசல் வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பிரதிவாதியிடம் பல முறை நேரில் கேட்டதில், அதற்குப் பிரதிவாதி, தாவா பிராமிசரி நோட்டுபடி சேர வேண்டிய அசல்வட்டி தொகையை கொடுத்து பைசல் செய்யாமல் வீண் விரையம் செய்து வந்தார் என்றும் வாதி தன் வழக்கை வா.சா.1, வா.சா.2 வரையிலான சாட்சியம் மூலம் மெய்பித்துள்ளார் என்றும் கூறி வழக்கை தீர்ப்பு செய்யுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணமும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/வாதி தனது முதல் விசாரணை சாட்சிய பிரமாண வாக்கு மூலத்தில் பிராது சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2, வா.சா.3/தாவா பிராமிசரி நோட்டின் சாட்சிகள் மேற்படி வா.சா.1 சாட்சியத்திற்கு ஒத்திசைந்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

9. வாதி தரப்பில் 27.03.2020 தேதியில் வாதி பிரதிவாதிக்கு ரூ.2,20,000/-க்கு எழுதி கொடுத்த தாவா பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும் 27.02.2023 தேதியில் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அசல் வா.சா.ஆ.2 ஆகவும் பிரதிவாதிக்கு மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியதற்கான அஞ்சல் துறையில் வழங்கப்பட்ட இணையவழி பதிவிறக்கம் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. பிரதிவாதி வழக்குரை சங்கதிகளை மறுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. அவர் வா.சா.1, வா.சா.2 மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 சாட்சிய சான்றாவணங்களை குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. அவர் வா.சா.ஆ.1 புரோநோட் கடன் நிலுவையை செலுத்தவும் இல்லை. எனவே வாதி பிரதிவாதிக்கு எதிராக தனது வழக்கை தன் தரப்பு சாட்சியங்கள் மூலம் மெய்பித்துள்ளது புலனாகிறது.

11. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இந்த வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.2,79,455/- மற்றும் அசல் தொகை ரூ.2,20,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.2,20,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியாலும் பிரதிவாதிக்கு பாத்தியமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களாலும் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** வழக்கானது வாதி கோரியவாறு பிரதிவாதிக்கு எதிராக தாவா தொகையான ரூ.2,79,455/- மற்றும் அசல் தொகை ரூ.2,20,000/-க்கு தாவா தாக்கல் தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% p.a. பின்வட்டியும் அசல் தொகை ரூ.2,20,000/-க்கு தீர்ப்பாணை தேதிக்குப்பிறகு தாவா தொகை வசூலாகும் வரை 6% p.a பின்வட்டியும் பிரதிவாதியாலும் பிரதிவாதிக்கு பாத்தியமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களாலும் வாதிக்கு கிடைக்கும்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் 2 மாதங்கள்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 16.03.2026 திங்கள்கிழமை ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

M S VARALAKSHMI Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**வாதி தரப்பு சாட்சி :-**

வா.சா.1 திருமதி. தனலட்சுமி (வாதி)

வா.சா.2 திரு. ராதாகிருஷ்ணன்

வா.சா.3 திரு. செல்வராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.03.2020 | வாதி பிரதிவாதிக்கு ரூ2,20,000/-க்கு எழுதி கொடுத்த தாவா பிராமிசரி நோட்டு (அசல்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 27.02.2023 | வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது (அசல்) |
| வா.சா.ஆ.3 | - | அஞ்சல் துறையில் வழங்கப்பட்ட இணையவழி பதிவிறக்கம் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-</u>**

(இல்லை)

M S VARALAKSHMI

Digitally signed by M S VARALAKSHMI

முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.